சிறுவை. மோகனசுந்தரன்
அமைச்சர்
நகரின் கழகம்

" தமிழகம் "
27, கொண்டலையர் தெரு
சென்னை-1 7. 7. '53

10 JUL 1953

திரு.
அமைச்சர் அவர்கள்
டெல்லி தமிழ்ச் சங்கம்
புது டெல்லி

அன்புடையீர்,
வணக்கம்.
இத்துடன் எமது கழகக் கட்டணம்
அனுப்பி உள்ளது.

அன்பன்
சிறுவை, மோகனசுந்தரம்.

# நக்கீரர் கழகம்

## சென்னை

———:———

### கொள்கைகள்

1. தமிழ் வகுப்பு நடத்தல்.
2. தமிழ் மொழியை வளர்த்தல்.
3. தமிழ்ப் புலவர்கள், தமிழ்ப் பெரியார்கள் திருநாட்களைக் கொண்டாடுதல்.
4. சிறந்த தமிழ் நூற்களை வெளியிடுதல்.
5. நூல்நிலையம், இரவு பாடசாலை முதலியன அமைத்தல்.
6. மாணவர்களைத் தமிழ் மொழியில் சொற்பொழிவாற்றவும், கட்டுரை எழுதவும் பழக்குதல்.

### கழக உட் பிரிவுகள்

1. நக்கீரர் தமிழ் இலக்கிய வகுப்பு.
2. மகா வித்துவான். கா. நமச்சிவாயர் நூல் நிலையம்.
3. கம்பர் பதிகம்.
4. திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி.
5. சேக்கிழார் தொண்டர் படை.

### நக்கீரர் கழகம், சென்னை

# திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

(துவக்கம் 1944)

இக் கல்லூரி நாளை ஜூலை மாதம் 15-ஆம் நாள் மீண்டும் திறக்கப்படும். தினம் மாலை 6-30 மணி முதல் இரவு 8 மணி வரையில் சனி, ஞாயிறு நீங்கலாகச் சென்னை, 135, அண்ணாப் பிள்ளைத் தெரு, **பிரம்ம சமாஜ பாடசாலையில்** நடைபெறும்.

உயர்திரு, பேராசிரியர். **மயிலை. சிவ முத்து** அவர்கள் தலைமைப் பேராசிரியராக (Hony. Principal) இருந்துபணியாற்ற இசைந்துள்ளார்கள்.

மேலும்கீழ்க்கண்ட அறிஞர்கள் துணைஆசிரியர்களாக இருந்து பணியாற்ற இசைந்திருக்கின்றனர்.

திரு வல்லை. பாலசுப்பிரமணியம், பி.ஏ.<br>(Hony. Vice-Principal)<br>
திரு. புலவர் கு. பாலசுந்தர முதலியார்.<br>
திரு வித்வான் ஜா. ப. இராஜசேகர நாயகர்.<br>
திரு வித்வான் பண்டித மீ. பொன். இராமநாதன் செட்டியார்.<br>
திரு வித்வான் கோ. வில்வபதி.<br>
திரு வித்வான் கா. சி. தனக்கோட்டி.<br>
திரு வித்வான் தணிகை உலகநாதன்.<br>
திரு. புலவர் அகஸ்தியலிங்கம், B.A., (Hons).<br>
திரு. வித்வான் அழகுவேலனார்.<br>
திரு வித்வான் முத்து நமச்சிவாயர்.<br>
திரு வித்வான் அறிவழகனார்.

வழக்கம்போல் வித்வான் பிரவேச வகுப்பு (Entrance) வித்வான் இடைநிலை (Preliminary) வகுப்புக்கள் நடைபெறும்.

கூடியவிரைவில் வித்வான் முடிவு வகுப்பு துவக்கப்படும். ஒவ்வொரு புதன்கிழமை மாலை 6–30 மணிக்குப் பொதுமக்கள் அறிவு வளர்ச்சிக்காக புறநானூறு, திருக்குறள் முதலியன பற்றிச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

பெண்களுக்குத் தனி இடம் உண்டு. தமிழ் பயிலத் தக்கதோர் நற்சமயம். தமிழ் பயில ஆர்வமுள்ள அனைவரும் வந்து கலந்து கொள்ளலாம். வித்வான் தேர்வுக்குப் பயில விரும்பும் அன்பர்கள், "அமைச்சர், திருவள்ளுவர் கல்லூரி, 27, கொண்டலையர் தெரு, சென்னை-1" என்ற முகவரிக்கு ஜூலை 15-தேதிக்குள் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

சென்னை–1,<br>3–7–53.

**நக்கீரர் கழகம்**

Selvam Press, Madras-1